# TENTH ANNIVERSARY OF THE NAITA TRAINING PROGRAMME




## தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபை

### பயிற்சித் திட்டத்தின்

### 10வது ஆண்டு நிறைவு விழா

01.10.2003

National Apprentice and Industrial Training Authority

&

Vadamaradchy Steno Club

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையுடன்
வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் இணைந்த
பயிற்சித் திட்டத்தின் 10வது ஆண்டு நிறைவு விழா
மலர் சிறக்க எமது வாழ்த்துக்கள்



உழைக்கும்போதே
எதிர்காலத்திற்காக
சேமியுங்கள்

மக்கள் வங்கி

முதன் முதல் வேலைக்குப் போன நாள் உங்களுக்கு ஞாபகமா? அன்று உங்கள் மனதில் தோன்றிய புத்துணர்வு ஒரு புதிய அனுபமாக இருந்ததல்லவா? உங்கள் சம்பளம், வருமான வழி, புதிய பேர்ஸ். நிறையப் பணம், கையை வீசிச் செலவழிக்கத் தோன்றும் எண்ணம். இருப்பினும் இப்பொழுதே மாதாந்தம் ஒரு தொகைப் பணத்தை சேமித்தால் நீங்கள் மேலும் நிறையச் சாதிக்கலாம். வெளிநாடு சென்று உயர் கல்வியைத் தொடர, ஒரு சொந்த வாகனத்தை வாங்க... அந்த சேமிப்பு பல வழிகளில் உங்களுக்கு உதவும். நீங்கள் பண ரீதியாகவும் சுதந்திரமாய் இருக்க மக்கள் வங்கியின் YES சேமிப்புக் கணக்கை இன்றே ஆரம்பியுங்கள்.

**YES சேமிப்புக் கணக்குப் பற்றி**

**ஆரம்ப வைப்புத் தொகை :-** YES கணக்கை ஆரம்பிக்க குறைந்த, ஆரம்ப வைப்புத் தொகை ரூபா 2000/-. சிறுவர் சேமிப்புக் கணக்கை பிள்ளைக்கு 18வயதானதும் YES சேமிப்புக் கணக்காக மாற்றலாம்.

**கவர்ச்சிகரமான வட்டி:-** வட்டி மாதாந்தம் உங்கள் கணக்கில் வரவு வைக்கப்படும். ரூபா 24,999/- வரையிலான வைப்புத் தொகைக்கு சாதாரண வட்டி வீதம். ரூபா 25,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு 1% போனஸ் வட்டி. ரூபா 1000/-க்கு மேற்பட்ட வைப்பிற்கு வட்டி வழங்கப்படும்.

**YES சேமிப்புக் கணக்காளர்களுக்குக் கிடைக்கும் நன்மைகள்:-** உங்கள் வைப்புத் தொகை ரூபா 15000/-க்கு மேற்பட்டால் நிலையான கட்டளைகளுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது. ATMகாட் இலவசம், காட் சட்ட திட்டங்களுக்கு அமைய இலவச கிரடிட் காட் (தேவையான வைப்புத் தொகையுடன் 6மாதங்களின் பின்) பீபள் லீசிங் நிறுவனத்திடமிருந்து லீசிங் வசதி.

**ஆயுள் காப்புறுதி:-** வைப்புத் தொகையின் 10மடங்காக, ஆகக்கூடியது ரூபா 500,000/- ஆயுள் காப்புறுதி. 6மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துக்கு உங்கள் கணக்கில் ஆகக் குறைந்தது ரூபா 10,000/- வைப்பில் இருக்க வேண்டும்.

ஏனைய கடன்கள்:- உங்கள் வைப்புத் தொகையைப்போல் 10 மடங்கு. பின்வரும் தேவைகளுக்காக நாம் உங்களுக்குக் கடன் வசதியை வழங்குவோம்.:- உயர் கல்வி, வியாபார அபிவிருத்தி, வியாபாரத்தை ஆரம்பிக்க, வீடு அல்லது வாகனம் வாங்க, கல்விச் சுற்றுலாக்கள்/ விடுமுறைகள், குடும்ப நிகழ்ச்சிகள், கம்ப்யூட்டர் போன்ற பொருட்களை வாங்க.

மக்கள் வங்கியின் ஜயஸ்ரீ பரிசிழுப்பில் கலந்து கொள்ளும் வாய்ப்பு:- இக்கணக்கில் ஆகக் குறைந்தத ரூபா 10,000/-ம் வைப்புத் தொகையாக இருப்பின் ஜயஸ்ரீ பரிசிழுப்பில் கலந்து கொள்ளும் தகுதியையும் பெறலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழக கீதம்

இராகம் : பாகேஸ்ரீ | | தாளம் : ஆதி

ஈழத்தலைய தாம் எங்கள் வடமராட்சியில்
இலங்குகின்ற நம் கழகமாம் (ஈழ)

வாழத் துடிக்கின்ற இளைஞர் யாவர்க்கும்
வழிகள் காட்டிடும் நிறுவனம்

நாளும் வளர் தமிழ் ஆங்கில மொழிகளில்
தட்டெழுத்துடன் கூடவே

வாழும் சுருக்கெழுத்தாகிய கலைகளை
மாணவர் பயின்று ஓங்கவே

நுண்ணறிவூட்டும் பயிற்சிகள் பரீட்சைகள்
நூலக வசதிகள் யாவையும்

எண்ணங்கள் சேவைகள் இனிதுற ஆக்கியே
ஏற்றமொடென்றும் வாழ்கவே

திண்ணிய கழகமாம் வடமராட்சி
சுருக்கெழுத்துக் கழகம் வாழியவே
சுருக்கெழுத்துக் கழகம் வாழியவே

ஆக்கம்:—கோப்பாய் சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

තෘතීයික අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන කොමිෂන් සභාව
மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION

## ලියාපදිංචි කිරීමේ සහතිකය
## பதிவுச் சான்றிதழ்
## CERTIFICATE OF REGISTRATION

This is to certify that

VADAMARACHCHI STENO CLUB

is registered as an Institute to conduct
Courses and Examinations
in

ENGLISH & TAMIL SHORTHAND.. ENGLISH & TAMIL TYPEWRITING

at

STENO TYPING TRAINING CENTRE
NEAR VATHIRI JUNCTION, UDUPIDDY ROAD, KARAVEDDY

This Certificate is issued under the Registration of Institutes and Examination (Interim) Regulations, 1991 made under the Tertiary and Vocational Education Act No. 20 of 1990.

Registration No. 04. 0039. 0353

Category VOCATIONAL EDUCATION

Date of Certification August 14, 1992

*Director-General*

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 01. ஆசிச்செய்தி | 05 |
| 02. வாழ்த்துச் செய்திகள் | 06 – 09 |
| 03. மலர்க்குழுவின் முன்னுரை | 10 – 11 |
| 04. Massage from the President | 12 – 13 |
| 05. வீறுநடை போடும் எமது கழகம் | 14 – 17 |
| 06. Summary of the Secretary's Report | 18 – 19 |
| 07. NAITA Programme and it's benefit | 20 – 21 |
| 08. The Pitman Shorthand... | 22 – 24 |
| 09. வாழ்வில் வசந்தம் வீசும்... | 25 – 26 |
| 10. இடரிலும் தளராது பணியாற்றிய கழகம் வாழி | 27 – 28 |
| 11. கணினியின் ஓர் அறிமுகம் | 29 – 31 |
| 12. சுருக்கெழுத்தில் குறிப்பெடுத்தல் | 32 – 35 |
| 13. The Importance of English | 36 – 37 |
| 14. A Trainee's View | 38 – 39 |
| 15. வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின்.. | 40 – 41 |
| 16. Executive Committe | 42 |
| 17. கழகப் போதனாசிரியர்கள் ... | 43 – 44 |
| 18. Laughing | 45 |
| 19. Details of N.A.I.T.A Students... | 46 – 61 |
| 20. விளம்பரங்கள் | 62 – ... |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்க்குழு :-

திரு.சி.குலசிங்கம்
திரு.க.வ.சிவச்சந்திரதேவன்
திரு.அ.பௌநந்தி
திரு.வ.மகீபன்

அச்சுப்பதிப்பு:

மதுரன் கிறா(f)பிக்ஸ், அல்வாய்.



**Late Prof A.Thurairajah**
NAITA PROGRAMMED CO-ORDINATOR
1993 - 1994



Executive Committee:- Mr.N.Kaleen (Committee Member), Miss.R.Vani(Committee Member), Miss.T.Yalini(Teacher), MissR.Siyamala(Committee Member), Miss.N.Suyathini(Committee Member),Mr.N.Maheepan(Asst Secratory), Mr.K.V.Shivashanthirathevan (Secratory), Miss.R.Malini (Vice President), Miss.S.Kamala(Treasurer) Mrs.J.Yogenthiran(Vice President), Mr.S.Kulasingham(President)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Some of the former Trainees :**



Top:- Miss.S.Kayathiry, Miss.P.Thusyanthy, Miss.P.Renuka, Miss.L.Niththiya, Miss.K.Kumsha, Miss.S.Nirojini, Miss.T.Rajini, Miss.R.Subagini, Middle:- Volunteer Instructors-Miss.M.Mohana. Miss.T.Yalini, Miss,J.Yogenthiran, Miss.S.Kamala, Bottom:-Miss.R.Malini. Miss.T.Piriyatharsisni, Miss.P.Laksmiya, Miss.R.Sivamathy, Miss.S.Krishnarani, Miss.P.Vaitheky, Miss.S.Thanusiya.



Top:- Miss.N.Rajenthirarani, Miss.V.Sutharsini,Miss.T.Yalini, Miss.N.Sujathini, Miss.S.Shathiyapama, Miss.J.Vasuki, Miss.T.Kavitha, Miss.S.Shasireka, Miss.B.Bathukathevi, Miss.S.Kalaichchelvi, Miss.S.Thayalini, Miss.R.Vani. Middle:- Mrs.J.Yogenthiran, Mr.K.Kanagarajan, Mr.R.Ananthasorupan,Miss.S.Kamala, Mr.Mathivannan, Mr.N.Kaleen Bottom:- Mr.V.Maheepan, Miss.R.Siyamala, Miss.K.Priyatharsini, Miss.K.Pavatharani, Miss.J.Piramini, Miss.S.Abirami.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

**Sri Sarada Sevashrama.**
Point Pedro,
Sri Lanka.
08.10.2003.

தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபை பயிற்சித் திட்டத்தின் 10வது ஆண்டு நிறைவினையிட்டு எங்களுடைய மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இவ் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் 01.10.1985இல் ஆரம்பிக்கப்பட்டது. அன்று தொட்டு பலவருடங்களாக பலவிதமான அரசியல் சூழலிலும் இக்கழகம் தன்பணியை சிறப்புற ஆற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

நவீன யுகத்தில் வாழும் அனைவருக்கும் இக்கழகம் எதிர்காலத்தில் கணினிகள் மூலம் பயிற்சியினை வழங்கி பயிலுநர் முன்னேற தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபையினர் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை எடுப்பார்களாக.

மீண்டும் அனைவருக்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள்.

*இறைபணியில்*
*அன்புள்ள*
சுவாமி சித்ரூபானந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Ministry
248, 2/1, Galle Road,
Colombo-04.

Jaffna Regional Office
District Secretariat
Jaffna

MINISTER OF HINDU RELIGIOUS AFFAIRS
Thiyagarajah Maheswaran, M.P.

Ministry
Telephone : 01-554851
Fax : 01-554853

Jaffna Regional Office
Telephone : 021-2225613
Fax : 021-2223648

02 மே 2003

திரு.சி.குலசிங்கம்
தலைவர்
வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்
வதிரி, கரவெட்டி.

**யாழ்ப்பாணம், காரைநகர் ஆகிய பகுதிகளில் சுருக்கெழுத்து,**
**<u>தட்டச்சு புதிய பிரிவுகளை ஆரம்பித்தல்</u>**

தங்கள் கழகத்தால் தமிழ் சுருக்கெழுத்து, தட்டச்சு பாடத்திற்கான பயிற்சி நெறி மிகவும் சிறப்பாக நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இதன்மூலம் பெருந்தொகையான மாணவர்கள் பயனடைகின்றார்கள் என்பதை அறியக்கூடியதாகவுள்ளது.

மேலும் காரைநகர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இத்தகைய ஒன்றை தங்கள் கழகம் மூலம் ஆரம்பிப்பது தொடர்பாகத் தங்களிடமிருந்து ஆலோசனைகளை எதிர்பார்க்கின்றேன். காரைநகரில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்பயிற்சி நெறியினைப் பின்பற்றத் தயாராகவுள்ளனர். அதேபோன்று யாழ்ப்பாணத்திலும் பல மாணவர்கள் பயிற்சிபெறவுள்ளனர். இவ்விரு இடங்களிலும் தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சிநெறிகளை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளேன்.

இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான உங்களின் சம்மதத்தையும் அதற்கான ஏற்பாடுகள் பற்றியும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

தி. மகேஸ்வரன்
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்

Residence - Colombo
110/3, ... கொழும்பு-07.

Residence - Jaffna
280, ...



MINISTRY OF TERTIARY EDUCATION AND TRAINING
தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை
NATIONAL APPRENTICE AND INDUSTRIAL TRAINING AUTHORITY

971, SRI JAYAWARDENAPURA MAWATHA, WELIKADA, RAJAGIRIYA

## MESSAGE OF APPRECIATION

I am privileged to have received this invitation of yours to send this message to the Vadamaraadchy Steno Club, to mark the completion of 10 years of yeoman services rendered to the youth in the area, in collaboration with the National Apprentice & Industrial Training Authority.

I appreciate your dedicated commitment towards youth development, not only as the Chairman of NAITA but also as a person who has been a very successful Stenographer during my younger days. It is a very decent and a noble profession to begin a career.

During our days, we never enjoyed the luxury of a computer like now. Even an electronic typewriter was not available during that time. It was that manually operated cumbersome typewriter that helped us to do our work. I consider Stenography to be the most useful skill that I have acquired in my life.

It is important to note that the peaceful atmosphere prevailing in the country at present has paved way for foreign investment and rapid economic development, which means more jobs for our youth. I am sure that the trainees of your organization will derive immense opportunity from this new trend.

I wish the Vadamaraadchy Steno Club and its members the very best of success in pursuing its objectives.

**Ajith Colonne**
**Chairman**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



## தேசிய பயிலுநர்
## கைத்தொழில் அதிகார சபை
## பயிற்சித் திட்டத்தின்
## 10வது ஆண்டு நிறைவு விழா

வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம் இளைஞர்களும் யுவதிகளும் தொழில்நுட்பக் கல்வித் தகைமைகளைப் பெறுவதற்கு அரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. சுருக்கெழுத்து, தட்டெழுத்து துறைகளில் இவ்வாறு பலர் இந்நிறுவனத்தில் பயின்று தேர்ச்சிகள் பெற்று பல அரச தனியார் நிறுவனங்களிலும் வேலை வசதிகள் பெற்று நன்மையடைந்துள்ளனர். எனது பிரதேச செயலகத்திலும் இந்நிறுவனத்தைச் சேர்ந்த பயிலுநர்கள் ஆண்டுதோறும் சில மாதங்களுக்கு பயிலுநர்களாகச் செயற்படுகின்றனர். தற்போது கணினிப்பயிற்சி நெறியை ஆரம்பித்து நடத்துவதற்கும் ஆக்கபூர்வமான முயற்சிகளை இக்கழகம் மேற்கொண்டு வருகிறது. தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையுடன் இணைந்து வழங்கும் இந்நிறுவனத்தின் பயிற்சிகள் 10வது ஆண்டினை நிறைவு செய்வது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இத்தகையதொரு நீண்டகாலப் பயணம் இக்கழகத்தின் உறுதிப்பாடான செயற்பாட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது. இந்நிறுவனம் தொடர்ந்தும் பல்லாண்டு சேவையாற்ற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**ஆ.சிவசுவாமி**
***பிரதேச செயலர்,***
***பருத்தித்துறை.***

## வடமராட்சி சுருக்கெழுத்து தட்டச்சுத் துறையின் முன்னோடிகளில் முக்கிய பங்கு வகிப்பவர்கள்



வடமராட்சி மாணவர்கள் சுருக்கெழுத்து, தட்டச்சுத் துறையில் கல்விகற்று அரசாங்க, தனியார் துறையில் தொழில் பெறுவதற்குக் காரணமாக இருந்தவர்களில் முக்கிய பங்கை வகிப்பவர்கள் வடமராட்சிச் சுருக்கெழுத்துக் கழகத்தினர்.

இக் கழகம் 1985.10.01இல் ஆரம்பிக்கப்பட்டது. இதை ஆரம்பிப்பதற்கு முக்கிய பங்காற்றியவர் திரு.க.வ.சிவச்சந்திரதேவன்.

1993.10.01 தொடக்கம் இக் கழகம் தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையுடன் சேர்ந்து சுருக்கெழுத்து, தட்டச்சுக் கற்பித்தலை மேற்கொண்டுள்ளது. 10 ஆண்டுகளாக இது நடைமுறைப்படுத்தப்பட்டது பாராட்டத்தக்கது.

இக்கழகத்தில் பயின்ற மாணவர்கள் பல வருடங்களாக தங்கள் பயிற்சிக்காக வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகங்களிலும், வடமராட்சி வலயத்திலும், பாடசாலைகளிலும் தொண்டு அடிப்படையில் ஆறு மாதங்கள் கடமையாற்றினார்கள்.

தட்டச்சாளர் பற்றாக்குறையாக உள்ள நேரத்தில் கடமையாற்றி எமது வலய பாடசாலைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார்கள். இப்பயிற்சி மாணவர்கள் பொறுப்பாகவும் சிறந்த முறையிலும் கடமையாற்ற உதவியது பாராட்டத்தக்க விடயமாகும்.

தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபை மாதாந்தம் மாணவர்களுக்கு உதவு தொகையை வழங்கி அவர்கள் சிறப்பாக தட்டச்சு, சுருக்கெழுத்து என்பவற்றைக் கற்க உதவியுள்ளார்கள்.

இக்கழகம் மாணவர்களுக்கு ஆங்கில பாடத்தைக் கற்பிப்பதும் ஓர் நல்ல செயற்பாடாகும்.

தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையுடன் சேர்ந்து 10 ஆண்டுகள் முடிவுறும் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் மேன்மேலும் வளர்ச்சியுற வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி விடைபெறுகிறேன்.

**வி.அருளானந்தம்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்(நிர்வாகம்)
வலயக் கல்வி திணைக்களம்
வடமராட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழுவின் முன்னுரை

தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபை பயிற்சித் திட்டத்தின் 10வது ஆண்டு நிறைவு விழாமலர் தங்கள் கரங்களில் தவழ்கின்றது. வடமராட்சிச் சுருக்கெழுத்துக் கழகத்தின் அனுசரணையுடன் கடந்த பத்து ஆண்டுகால பயிற்சிநெறியின் ஆரம்பம், அதற்கான காரணகர்த்தாக்கள், வளங்கள், செயற்பாடுகள், செயன்முறைப்பயிற்சி, பயன்பாடு, பயனாளிகள், வளப்பற்றாக்குறைகள் ஆகிய விடயங்கள் பற்றி இம்மலர் பகர்கின்றது. எனினும் பயனாளிகள் பற்றிய முழு விபரத்திரட்டையும் புலப்பெயர்வு மற்றும் காரணிகள் காரணமாக முழுமையாகத் தரமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

பத்து ஆண்டு காலத் தொகுப்புக்கள் என்ற தலைப்புக்குள் நின்று விடாது, இம்மலர் பயிற்சியாளர்களுக்கான துறைசார்ந்த ஆலோசனைகள், வழிகாட்டல், உச்சநிலைப் பயன்பாடு, துறைசார்ந்த வரலாற்றுத் தொகுப்பு ஆகியவற்றையும் சுமந்து வருகின்றது.

கணினிப்பயிற்சி ஆரம்பிக்க வேண்டிய அவசியம்பற்றி ஆசிச்செய்தி முதல் வாழ்த்துரைகள் வரையிலும் கழகநிர்வாகத்தினர், பயனாளிகள் (பயிற்சி முடித்தோர்) ஆகியோரின் ஆக்கங்களிலும் வலியுறுத்தப்படுவது நவீன தகவல் தொழில்நுட்ப யுகத்தில் அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் ஓர் அம்சமாகத் தென்படுவது உன்னிப்பாக அவதானிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

மணம் வீசும் மலராக மாத்திரமன்றி குணத்திலும் குன்றேறி நிற்கவேண்டும் என்பது அவா. அந்தவகையில் உள்ளத்துக்கு விருந்தாக சிந்தனைத் துளிகளும், உற்சாகமளிக்க நகைச்சுவைத் துணுக்குகளும் ஆங்காங்கே தவழ்கின்றன.

பல்துறைப் பரிமாற்றத்தேவை பயிற்சியாளர்களின் நலன் என்பவற்றைக் கருத்திற்கொண்டு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் தொகுக்கப்பட்டுள்ளது.

தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபை பயிற்சிநெறி தொடர்பான நிறைவுவிழாமலர் வெளியிடப்படவேண்டுமென்பது கழக நிர்வாகத்தின் நீண்ட நாள் அவா. அதன் பின்புலத்தில் விளைந்த தோட்டத்து மலர்களால் தொடுக்கப்பட்ட சரமே இது.

இம்முயற்சியில் ஈடுபடும்போது எதிர்கொள்ளவேண்டிய படிமுறைகள், பொறுப்புக்கள், தேடல்கள், தொடர்பாடல்களுக்கான கால அவகாசம் மற்றும்



பல்வேறு அம்சங்கள் பற்றி நாம் கூறித் தெரியவேண்டியதொன்றில்லை எனக் கருதுகிறோம்.

இம்மலர் நறுமணம் கமழ வேண்டுமென்ற வகையில் ஆசியுரை வழங்கிய சுவாமிகள், வாழ்த்துரை வழங்கிய அறிஞர் பெருமக்கள் ஆகியோருக்கும் தொகுப்புக்கள், நல்லாக்கங்கள் தந்தோர்க்கும் பண்பட்ட கருத்துக்களைத் தொகுத்துத் தந்த பயிலுநர்களுக்கும் மனமுவந்து விளம்பரம் தந்துதவிய நிறுவனங்கள், நிழற்படங்களை ஆக்கித்தந்த சாயி ஸ்ருடியோ, பிரத்தியேக கவனமெடுத்து அழகுற அச்சிட்டுத் தந்த மதுரன் கிறா(f)பிக்ஸ் நிறுவனத்தார்க்கும் பல்வேறு வழிகளில் ஆக்கபூர்வமான ஆலோசனை, ஒத்துழைப்பு நல்கிய அன்புள்ளவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகள்.



– மலர்க்குழு –

**முத்துக்கள் சில**

**முதலில் சேவை – பின்பு தன்னலம் என்ற மனப்பான்மை அனைவரிடமும் ஏற்படவேண்டும். அப்போதுதான் நல்ல சமுதாயம் உருவாகும்.**

டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன்

**மனிதன் தன்னைத் தானே தாங்குபவனாக தன் சொந்தக் கால்களால் தலைநிமிர்ந்து நிற்பவனாகச் செய்யவல்ல கல்வியே நமக்கு வேண்டப்படுவது.**

சுவாமி. விவேகானந்தர்

**பற்று அற்று பணிசெய்**
**உண்மையே பேசு நன்மையே பெறு**
**வெறுங்கை என்பது மூடத்தனம்**
**விரல்கள் பத்தும் மூலதனம்**
**சூது தருமத்தை வெல்லும்**
**ஒரு நாள் தருமம் சூதை வெல்லும்**
**இயற்கையுடன் அண்டி வாழப் பழகிக்கொள்**



**அதிஸ்டம் எப்போதும் சுறுசுறுப்பைத் தொடர்ந்தே சென்று கொண்டிருப்பதைக் காணலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MESSAGE FROM THE PRESIDENT



I have great pleasure in presenting this message to the Souvenir published on the occasion of the 10th Anniversary of the National Apprentice & Industrial Training Authority programme which is being conducted at the Vadamaradchy Steno Club in the field of Stenography and Type-writing (both in Tamil and English media).

In this souvenir, we have endeavored to give the basic information in regard to the various activities of the VSC in general and the NAITA in particular; and also the suggestions and remedial measures which are of vital importance to improve the situation.

At this moment, we remember with gratitude the late Professor, A.Thurairajah, Vice Chancellor, University of Jaffna, who was mainly responsible to co-ordinate the NAITA Training Scheme with the Vadamaradchy Steno Club with the approval of the NAITA with effect from 1.10.1993.

Since then, our club has successfully completed a period of 10years satisfying the requirements of youth of the area to a reasonable extent in the respective fields by imparting good and sound training in a strict environment and atmosphere by the dedicated instructors who were our students – on service basis – despite several handicaps during the period.

Occasions of this nature are very essential not only for documentation purposes but also to analyse the past and to take meaningful steps towards the well – being of our present and future generation in accordance with the fast changing global Information Technologytowards this venture.



We solicit the Co-operation of the NAITA to grant us approval to start Computer Training Programme in the near future. It is our fervant hope that NAITA will give timely guidance and support in the future NAITA – oriented activities of the club.

In conclusion, I wish to express my sincere thanks to the Chairman, NAITA, his officials, the Provincial Manager and his team of Officials for the necessary guidance and unstinted co-operation extended to the VSC to fulfill the NAITA programme successfully.

I also wish to thank the government departments. Non – government organizations and other sectors, such as MPCS etc in the area for absorbing our trainees for the "On the Job Training" which is a part of NAITA curriculum.

My thanks are also due to Mr.K.V.Shivashanthirathevan, Secretary of the VSC for the efficiency and dedication with which he carries out the duties with the support extended to him by the Executive committee, members, Instructors, Students and well wishers of the Vadamaradchy Steno Club.

I wish all our trainees a happy and Prosperous future.

Vathiry,
Karaveddy.
01.10.2003.

**S.Kulasingham**
President
Vadamaradchy Steno Club.

Learning without thinking is Useless
Thinking without learning is dangerous

Plan your work. Then work your plan

If you fail to plan
You plan to fail.



Trust in god but lock your car

Talk slowly but think quickly

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீறுநடை போடும் எமது கழகம்



### ஆரம்பகாலம்

01.10.1985ல் சுருக்கெழுத்து தட்டச்சுக் கலையை வேலையற்று இருக்கும் யாழ்ப்பாண மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கு சேவை நோக்குடன் பயிற்றுவித்து, அவர்களுக்கு வலுவான சான்றிதழையும் தொழில் ஒன்றையும் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

### வளர்ச்சிப்படி

எவ்வித மூலதனமுமின்றி முளைவளத்தையே நம்பி ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம் பல்வேறு கஷ்டங்கள், சோதனைகளுக்கு மத்தியிலும் அனைத்து தரப்பினரதும் ஆதரவுடன் 1985 முதல் 1992வரை 12 தமிழ் பிரிவுகளில் 279 பேருக்கும் 10 ஆங்கிலப் பிரிவுகளில் 244 பேருக்கும் பயிற்சி வழங்கியது. மேற்படி பிரிவுகளில் சில மல்லாகத்தில் மல்லாகம் இளைஞர் கழகத்துடனும் இருபாலையில் கோப்பாய் மக்கள் நலன்காக்கும் பிரிவின் அனுசரணையுடனும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்டவாறு வளர்ச்சியடைந்த கழகம் தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையின் அனுசரணையுடன் 1992முதல் சுருக்கெழுத்தாளர் பயிற்சிகளை வழங்க அதன் அப்போதைய வடமாகாணப் பயிற்சி முகாமையாளர் திரு.ம.சிவயோகசுந்தரம் அவர்களை அணுகியது. எனினும் அது சாத்தியப்படவில்லை. 1993ம் ஆண்டு எமது கழகம் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழுவினால் பதிவுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து எமது கழக நடவடிக்கைகளில் மிகவும் ஆர்வம் காட்டி வந்த அமரர் பேராசிரியர் அ.துரைராசா (முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



அவர்களின் சிபார்சுக்கமைய எமது கழகத்தில் 01.10.1993 முதல் தமிழ்,ஆங்கில மொழிகளில் தலா 20பேருக்கு சுருக்கெழுத்தாளர் பயிற்சியை வழங்க அனுமதி வழங்கியது. இதன் பிரகாரம் 01.10.1993 முதல் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.

### பயிற்சிநெறி

பயிலுநர்களின் பயிற்சிக்காலம் ஒரு வருடமாகும். இதில் தமிழ் பயிற்சிக்கு வகுப்பறைப் பயிற்சி 7மாதங்களும் செயன்முறைப் பயிற்சி 5மாதங்களும் ஆகும். ஆங்கிலப் பயிற்சிக்கு வகுப்பறைப் பயிற்சி 9மாதங்களும் செயன்முறைப்பயிற்சி 3மாதங்களுமாகும். இப்பயிற்சிக்குரிய பயிலுநர்களை கழகம் தகுதியானவர்களிடமிருந்து பெற்று தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபைப் பரிசோதகரால் நேர்முகப் பரீட்சை. வைக்கப்பட்டு பொருத்தமானவர்கள் தேர்ந்து எடுக்கப்படுகிறார்கள். இதற்குரிய போதனாசிரியர்கள் தொண்டர் சேவை அடிப்படையில் கழகத்தில் முன்பு பயின்ற திறமையானவர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

### வெளிக்களப் பயிற்சி

பயிலுநர்கள் தமது செயன்முறைப் பயிற்சிகளைப் பெற வசதியாக உள்ளூராட்சி நிறுவனங்கள், பாடசாலைகள், கல்வித்திணைக்களங்கள், அரச வைத்தியசாலைகள், பிரதேசசெயலகங்கள் மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒத்துழைப்பும் பெறப்பட்டன.

### மாணவரை உள்வாங்கல்

இப்பயிற்சிக்காக ஒவ்வொரு வருடமும் தலா 20பேர் ஒவ்வொரு பிரிவுக்கும் அனுமதிக்கப்படுகிறார்கள். எனினும் எமது பிரதேசத்தில் நடைபெற்ற யுத்தசூழல், வேறு உயர் படிப்பு, தொழில் வாய்ப்புப் பெறல் போன்ற பல்வேறு காரணிகளால் சில மாணவர்கள் பயிற்சியில் இருந்து இடையிலேயே விலகுகின்றமை கவலைக்குரியது.

### பரீட்சை

பயிற்சி முடிவில் மாணவர்களின் தேர்ச்சியை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அறிவதற்காகவும் அவர்களுக்கு பெறுமதி வாய்ந்த சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்காகவும் தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபையினரால் பரீட்சை ஒன்று நடாத்தப்படுகின்றது. எனினும் பல்வேறு காரணங்களால் பரீட்சை நடாத்தப்படுவது தாமதமாகின்றது. இதன் காரணமாக இறுதிப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தொகை குறைவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

**ஆங்கில மொழிமூலம் பயிற்சி**

ஆங்கிலப் பிரிவைப் பொறுத்தவரையில் மாணவர்கள் இப்பயிற்சியைப் பெற க.பொ.த(சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி பெற்று இருக்கவேண்டும். ஆனால் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் வேறு உயர்கல்வி பெற அல்லது, தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுச் செல்வதால் 2000ஆம் ஆண்டு முதல் போதிய மாணவர்கள் பயிற்சிக்கு விண்ணப்பிக்காமையால் இப்பயிற்சி நடைபெறுவதில்லை. எனினும் விரைவில் இந்நிலை மாறி ஆங்கில சுருக்கெழுத்தாளர் பயிற்சி மீள ஆரம்பிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என நம்புகிறோம்.

**தொழில் வாய்ப்பு**

இப்பயிற்சியைப் பெற்றவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களைப் பொறுத்தவரையில், தமிழ் மொழி மூலம் பயின்றவர்கள் பலர் இத்துறை சார்ந்த அரச தொழில்களைப் பெற்றுள்ளனர். மேலும் தொழில் வாய்ப்புப் பெற்ற பலர் தமது எதிர்கால நலன் கருதி திருமணத்தை முன்னிட்டு தமது வேலைகளில் இருந்து விலகி வெளிநாடு சென்றுள்ளமை துரதிஷ்டமாகும்.

**வளப் பற்றாக்குறை**

தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபையுடன் இணைந்து மேற்படி பயிற்சிகளை வடமாகாணத்தில் நடாத்தும் ஒரே நிறுவனம் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகமாகும். எனினும் இங்கு நிரந்தர போதனாசிரியர்கள் இல்லாதது ஒரு பெரும் குறைபாடு ஆகும். மேலும் இப்பயிற்சிகளை நடாத்தும் தொண்டர் சேவைப் போதனாசிரியர்களுக்கு வழங்கும் கொடுப்பனவு போதாது. அத்துடன் இப்பயிற்சிகளை நடாத்த சொந்தக் கட்டடம்



ஏதும் இல்லாததும் ஒரு குறைபாடாகும். இவற்றை நிவர்த்திக்க அனைவரும் தம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும்.

ஆங்கில சுருக்கெழுத்தாளர் பயிற்சி பெற்றவர்களுக்கு விசேட ஆங்கில வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபை போதனாசிரியர்களுக்குரிய கொடுப்பனவுகளை வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பயிற்சிகளைப் பெறும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்பு தொகையில் கடந்த சில ஆண்டுகளாக மாற்றங்கள் ஏற்பட்டதுடன், உரிய கொடுப்பனவுகள் கடந்த சில வருடங்களாக வழங்கப்படாது இருப்பதும் கவலைக்குரியது.

மேலும் கழகத்தில் எழுதுவினைஞர் செயன்முறைப் பயிற்சிகளை அவ்வப்போது தலா ஒரு வருடத்திற்கு நடாத்த தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபை ஆரவு வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

எமது கழகத்தில் நடைபெறும் பயிற்சிகள் சிறப்புற நடைபெற தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையின் உத்தியோகத்தர்களின் வழிகாட்டல்கள் எமக்கு உறுதுணையாக இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத்தில் சுருக்கெழுத்தாளர் பயிற்சிகளுடன் கணினிப்பயிற்சிகளையும் நடாத்த இக்கழகத்திற்கு தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபை அனுமதியும் ஒத்துழைப்பும் வழங்க முன்வரவேண்டும்.

**க.வ.சிவச்சந்திரதேவன்**
**செயலாளர்**

**பசித்த ஒருவனுக்கு நீ சோறு போடலாம். ஆனால் நாளைக்கும் அவனுக்குப் பசிக்கும். ஒரு தொழிலை நீ அவனுக்கு கற்றுக்கொடுத்தால் ஆயுள் உள்ள மட்டும் அவன் ஜீவனத்திற்குச் சம்பாதித்துக் கொள்கிறான்.**

**~ இராமதீர்த்தர்~**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SUMMARY OF THE SECRETARY'S REPORT

**Establishment:**
Vadamaradchy Steno Club established on 1-10.1985 to provide training on service basis, issue valid certificates and to find employment opportunity.

**Progress: 1985 to 1992 -**
12 Batches of 279(Students) – (Tamil)
10 Batches of 244 Students _ (English)
Certain batches conducted in collaboration with Mallakam Youth Council and People's Welfare Organization (Kopay) Permission granted by NAITA from 1.10.93 to give training in Tamil and English (20 each)

**Training:**
Training period of 1 year includes –
Tamil -7 months class-room training 5 months practical training.
English- 9 months class-room training 3 months practical training
Interview conducted by NAITA Inspectors and suitable candidates selected.

Instructors are old students and selected from the Club on service basis.

**Practical Training:**
Assistance of Local Authorities, Schools, Education Departments, Government Hospitals, Divisional, Secretariats, and MPCSS was obtained for practical training.



**Registration of Trainees**
Every year, 20 students for each course are admitted. The war situation prevailing in the area, higher studies, employment opportunities, going abroad are some of the reasons for leaving the courses.

**Examination** :
Examination is conducted by the NAITA at the end of training in order to issue a valid certificate. But due to various reasons as the examination is delayed the decrease in the number of students sitting for the final examination is unavoidable.

**Training in English Medium**

Those who obtained Credit Pass in English in the O/L are eligible to follow the English Medium course.

No English Steno course was conducted since 2000 as there was no sufficient number available.

**Employment opportunity** :
The beneficiales in the Tamil medium found employment opportunities in the respective fields. But many of them had to go abroad in the interest of their future.

**Shortage of Resources:-**

The only organization that conducts the above courses in the Northern Province in collaboration with the NAITA is the VSC. No permanent instructors available. No permanent building available. To overcome these shortcomings the co-operation of all concerned are solicited. We humbly request the NAITA to make the payment to the instructors who conduct these courses at V.S.C. There have been certain changes (decrease) in the incentive payment to the trainees. The payments for the last few years have not yet been paid.
NAITA should come forward to grant permission to conduct Computer Training simultaneously with Steno training with provision for payment to the lectures.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NAITA PROGRAMME AND IT'S BENEFITS

The Vadamaradchy Steno Club has been providing Training in Shorthand and Type – writing (Tamil & English) to the school-leavers since 1985. The majority of Stenographers and Typists who have found employment in the Jaffna District and elsewhere are the products of V.S.C. Hence I would say that the V.S.C. is not only a study centre but also a job bank.

As soon as the students complete A/L studies at school level, they join the V.S.C. after facing an interview and follow the course in Shorthand and Type-writing with the expectation that they could find employment opportunity quickly.

By the time the University study starts, the students of the club finish their course and practical training and are able to find employment according to their qualifications and experience. But the graduates from the University are waiting for years to find a job.

The efficient and disciplined management of the Club and the excellent services of the dedicated instructors boost the trainees to pay special interest in their studies.

The students who have successfully completed their courses are working as Stenographers, Clerks, Computer operators etc, and thereby become the bread-winner of the family.

We are very fortunate that the National Apprentice and Industrial Training Authority had come forward in 1993 to conduct the NAITA Training Programme in collaboration with the V.S.C, in the field of Shorthand and Type-writing. In addition, NAITA makes a payment of Rs.3000/= for the full course per trainee. Hence the students even from distant places come to follow the course in spite of the traveling difficulties prevailing in our area.

Now it is computer era and most of the offices have computers, People misunderstand that Typing is of no use. But our experience reveals that the typing experience is a basic requirement to follow the computer training easily.



It is our desire that the NAITA should provide the necessary computers to enable the V.S.C. to provide computer training to the youth of the area who show great interest in this field to gain more knowledge. The NAITA has helped the VSC. More than 1000 students have studied at the Club and most of them are working in various Government departments, and other institutions.


The people of Vadamaradchy are very proud of having NAITA Training at the Vadamaradchy Steno Club.

**S.Sathiyapama**
**NAITA Trainee 1998/1999**

If you teach a man, you teach only an individual. If you teach a woman, you teach the entire Family.

Talk not of the good turn you did your friend. Forget it. Advertised generosity has no virtve.

A secret between two is a secret of god; a secret between three is everybody's secret.



Three may keep a secret, If two of them are dead.

Let another man praise thee, and not thine own mouth.

A man of words and not of deeds is like a garden full of weeds.

Hard work is the best investment a man can make.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE PITMAN SHORTHAND SYSTEM THAT EKES OUT LAKHS OF PEOPLE

Despite the existence of numerous system of shorthand in the western countries, most of them did not have the courage to introduce them. Never the less in 1837 Sir Isaac Pitman of London basing sound as a fundamental and applying geometry as basic principles introduced the English shorthand system.

Pitman met those engaged in the art of shorthand periodically and having known their systems improved his system of shorthand.

Though there are more than 1500 systems of shorthand world over, Pitman system has been acclaimed as the most popular system and mostly used.

Not only did Pitman invent this system of shorthand but also figured himself as an expert in the use of this system of shorthand.

## Movement of sounds

When one speaks basing the movements of sounds Pitman shorthand is being used by various linguists. The fact that world renowned writers like Bernard Shaw, Charles Dickens and Lord Car Michel – the Governor General of India prior to its attaining independence, were also expert Pitman's shorthand writers, were not known to most people.

Samuel Pepees, the renowned thinker too maintained his diary in the Pitman's system of shorthand. The world renowned Bible and the article of the renowned thinker David Copperfield were extracts in Pitman's shorthand. Swami Vivekanandha's discourse made in his tours were recorded in shorthand by J.J.Goodwin an English youth and published in the forms of a publication. On the death of Goodwin,



the installation of a memorial in Ooddi at Tamil Nadu is the manifestation of his magnanimity.

Though one hundred years have passed since Pitman's demise his services are being performed by Sir Isaac Pitman & Sons Ltd. – establishment in the city of London. This establishment has hither to published over 100 shorthand publications.

## Magazines

With that some shorthand dictionaries too have been published. It is also publishing some English shorthand magazines. These publications are a boon to the instructors and students in shorthand.

The aforementioned establishment in entrusting its responsibility of reprinting and distribution of some of its publications to A.H.Wheeler & Co.(Pvt), Allahabad in India reveals the demand of the shorthand publications have.

Pitman Establishment through their branches and agents throughout the world conducts examinations to those who have trained themselves in shorthand and are awarding them with valuable certificates.

Sir Isaac Pitman was born on 4th January 1818 in the country of Wiltshire at Trobridge. Since he had formed a shorthand system based by his name he has been assessed as a great educationalist.

Sir Isaac Pitman, at first studied the Samuel Taylors system of shorthand Thereafter with a view to improving the system of shorthand invented his sound system of shorthand. In 1837 with the suggestion of the publisher Samuel Baxter and with his help distributed his shorthand publication at a low price to more people. As a result his shorthand method became world fame.

Sir Isaac Pitman was riddled with polio and his body was paralysed. He was not enslaved to the evils of alcohol and smoking. And to be heard it said that he was a pure vegetarian, is a matter for surprise.

In 1897 January 12 (One hundred years ago) at his age of 79 he died in the country of somerset at England.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Several people are engaged in the formation of new methods of shorthand in his shorthand method. Nevertheless noteworthy amongst them is Mr.Geo Brown of the Government Stenographer's Association, Australia.

Though 100 years have passed since the death of Sir Isaac Pitman, in Sri Lanka several thousands and in the world several lakhs are being fed by the Pitman system of shorthand and everybody should make an endeavour to improve and popularise this system.

**K.V.Shivashanthirathevan**
Hony. Secretary
Vadamaradchy Steno Club
Vathiri
Karaveddy.

**Ready money is a ready medicine.**

**Promise is debt.**



**A poet is born not made.**

**Pictures are the books of Unlearned.**

**Practice makes a man perfect.**

**Make a page of your own page.**

**The greatest man in history is the poorest.**

**Patience and gentleness is power.**



## வாழ்வில் வசந்தம் வீசும் தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபை பயிற்சிநெறி

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை 01.10.1993 முதல் தனது சேவையை வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்துடன் இணைத்துக்கொண்டது. வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக மாணவர்களில் சுமார் 40 மாணவர்கள் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் அனுசரணையுடன் சுருக்கெழுத்து, தட்டெழுத்து (தமிழ், ஆங்கிலம்) பயின்று வருகின்றனர். மாதாந்தம் அவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. இதனால் பெரும்பாலான மாணவர்கள் பெரிதும் நன்மையடைந்து வருகின்றனர். ஒரு வருட காலத்தைக் கொண்ட இக்கற்கை நெறியில் முதல் 7 மாதங்களும் கழகத்தில் பயிற்சி பெறுவதுடன் மிகுதி 5 மாதங்களும் செயல்முறைப்பயிற்சிக்காக அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். இது மாணவர்களுக்கு ஒரு தொழிலைப் பெறுவதற்கு நல்ல அனுபவமாகவும் அலுவலகங்கள் பற்றிய நடைமுறைகளை அறிவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பமாகவும் அமைகின்றது.

இவ்வாறு பயிற்சிபெற்ற மாணவர்களில் அதிகமானோர் அரசாங்க சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் போட்டிப் பரீட்சைகளில் தோற்றிக் கூடுதலான புள்ளிகளைப் பெற்று வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர். இக்கற்கை நெறி பூர்த்தியடையும் பட்சத்தில் தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையால் மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை நடாத்தப்படுகிறது. இப்பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு வலுவான சான்றிதழ் வழங்கப்படுவதுடன் கடந்த காலங்களில் வேலைவாய்ப்புக்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால், தற்போது இப்பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுவதில்லை. பயிற்சியைப் பூர்த்தி செய்து சித்தியெய்தும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கினால் அம்மாணவர்கள் பெரிதும் பயனடைவார்கள்.

இச்சபை சுருக்கெழுத்தாளர் பயிற்சியை வழங்குவது போன்று கழகத்துடன் இணைந்து கணினிக் கல்வியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கு பயிற்றுவித்து வந்தால் இன்னும் சிறப்பாக அமையும். ஏனெனில் இன்றைய கணினி யுகத்தில் கணினிக்கல்வி அத்தியாவசியமானதொன்றாகும். இது மாணவர்கள் மத்தியில் பெரிதும் வரவேற்பைப் பெற்றதொன்றாகும்.

இவ்வதிகாரசபையின் கீழ் தமிழ் சுருக்கெழுத்தாளராகப் பயில்வதற்கு க.பொ.த(சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தியும் ஆங்கில சுருக்கெழுத்தாளராகப் பயில்வதற்கு ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் பெற்றிருக்க வேண்டும். ஆனால் தற்போது பயிலவரும் மாணவர்களுள் பெரும்பாலோனோர் ஏனைய பாடங்களில் பல திறமைச்சித்திகளைப் பெற்றிருப்பினும் ஆங்கிலப்பாடத்தில் திறமைச்சித்தியின்மையால் பலர் தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபையின் ஆங்கில சுருக்கெழுத்தாளர் பயிற்சி நெறியைப் பெறுவதற்கான வாய்ப்பை இழக்கின்றனர். இது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். எனவே இதனைக் கருத்திற்கொண்டு போதிய கவனமெடுத்து ஆங்கிலப் பாடத்தில் திறமைச்சித்தி பெற்று எதிர்காலத்தில் பயிலவரும் மாணவர்கள் இப்பயிற்சிநெறியின் உச்சப்பயன்பாட்டை பெற்றுக்கொள்ளவேண்டும் என்பது துறைசார்ந்த பயிற்சியாளர் என்ற வகையில் எனது கருத்தாகும்.

"வீட்டு ஈயானது ஒருசமயம் அழுகிய புண்ணின்மீதும் மறுசமயம் நிவேதனத்துக்கு வைத்திருக்கும் பொருளின்மீதும் உட்காரும். ஆனால் தாமரையிலுள்ள தேனை அருந்தும் வண்டு அதைத்தவிர வேறொன்றையும் மதியாது. இவ்வீட்டு ஈயை போலிராமல் தேன்வண்டைப்போலிரு"

பரமஹம்சரின் இந்த வாக்கு இன்றைய இளைஞன், யுவதி கடைப்பிடிக்க வேண்டிய அறிவியல் அரிச்சுவடி.

வாழ்க்கைப் பாதையில் நீண்டதூரம் பயணம் செய்யவிருக்கும் இளைஞர்/ யுவதியாகிய நாம் முதற் கோணல், முற்றுங்கோணல் என்பதை நினைத்தே எமது கல்வியை தொடங்க வேண்டும். அந்தப் படிப்பையும் தேன்வண்டைப்போல் தேடிப்பிடித்து படிக்கவேண்டும். இதேபோன்று ஏனையோரும் தமது எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு அதற்கேற்றவகையில் தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபையின் அனுசரணையுடன் தொழிற் பயிற்சியைப் பெறுவது வரப்போகும் காலங்களுக்குப் போடப்படும் அத்திவாரமாக அமைகிறது.

செல்வி.கு.பிரியதர்சினி
பயிலுநர் 2000/2001



## இடரிலும் தளராது பணியாற்றிய கழகம் வாழி!

பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டவுடன் அடுத்து என்ன செய்வது என்று எண்ணி நின்றபோது எமக்குத் தொழிற்கல்விக்கு வழிகாட்டி வாழ்வில் வளம் பெருக்கியது எமது வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் ஆகும்.

தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையின் அனுசரணையுடனான ஆங்கில சுருக்கெழுத்தாளர் பயிற்சிநெறி நேர்முகப்பரீட்சை தெரிவுகளின் பின் 1995ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகியது. பயிற்சியில் கற்ற இருபது மாணவர்களும் மிகுந்த ஈடுபாட்டுடனேயே பயின்று வந்தோம். ஆனால் விதிவசத்தால் எமது பயிற்சி தொடங்கிய ஒருமாதத்தினுள்ளேயே தளம்பத்தொடங்கியது. 1995 ஒக்ரோபர் மாத இறுதிப் பகுதியில் யாழ்குடாநாட்டில் பாரிய இடப்பெயர்வு ஏற்பட்டது. எமது பயிற்சியில் கலந்துகொண்ட மாணவர்கள் பலரும் புலம்பெயர்ந்து சென்றுவிட்டனர். இந்நிலையில் எமது பயிற்சியும் இடைநடுவில் நிற்கலாயிற்று. ஒரு மாதம், இரு மாதம் அப்படியே சென்றது. பின் 1995ம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் கழகத்தின் செயலாளருடன் தொடர்பு கொண்டபோது எம்முடன் பயின்ற மாணவர்களில் எட்டுப்பேர்தான் இருந்தார்கள். இந்நிலையில் எமக்குத் தொடர்ந்து பயிற்சியை வழங்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தினாலும் இரண்டு தட்டச்சு இயந்திரங்களை இரு மாணவர்களின் வீட்டில் வைத்து அங்கு சென்று தட்டச்சைப் பயிலவும், சுருக்கெழுத்தை முன்பு கழகத்தில் பயின்ற மாணவி ஒருவரிடம் பயிலவும் கழகச் செயலாளரினால் ஒழுங்கு செய்யப்பட்டது. அப்படிப் பயின்ற எமக்கு செயன்முறைப் பயிற்சிகள் பாடசாலைகளிலும் கல்வித்திணைக்களங்களிலும் வழங்கப்பட்டது. எனினும் நாட்டுப்பிரச்சினை காரணமாக தேசிய கைத்தொழில் பயிலுநர் அதிகாரசபை அனுசரணையுடனான பயிற்சி இடையில் நிறுத்தப்பட்டது. இதனால் அப்பயிற்சி நெறியைத் தொடர்ந்து கொண்டிருந்த எமக்குக் கழகமூலமான தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கெழுத்தாளர் பயிற்சிநெறி தொடர வாய்ப்பளிக்கப்பட்டது. அந்த வாய்ப்பை நாமும் பயன்படுத்தி அந்நெறியைப் பூர்த்தி செய்தோம். இது க.பொ.த(சா/த) பரீட்சைக்குத் தோற்றவும் வழிவகுத்தது. 1996 டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த(சா.த) பரீட்சைக்கு அனைத்து பயிலுநர்களையும் விண்ணப்பிக்கச் செய்து பயிற்சி வகுப்புக்கள் நடாத்தி இவற்றுக்கு மேலாக தட்டச்சு இயந்திரங்களும் வழங்கி உதவியது. இது தவிர தேசிய கைத்தொழில் பயிலுநர் அதிகாரசபையினால் நடைபெறும் பயிற்சிநெறிக்கு ஒரு எழுதுநர் கடமையாற்றுவார். இந்த வகையில் 1996 ஓகஸ்ட் - 1997ம் ஆண்டு யூலை வரையான காலப்பகுதியில் பயிற்சிகள் முடிந்தும் வேலை எதுவும் கிடைக்காத நிலையில் எனக்கு எழுதுநராகக் கடமையாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. இதன்மூலம் அலுவலகச் செயற்பாடுகள் பற்றி நான் ஓரளவு அறிந்துகொள்ள வழிவகுத்தது.

இதன்பின்னர் 1997, 1998 ஆகிய காலங்களில் பல சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் அரசாங்கத்தினால் கோரப்பட்டன. இதற்கும் அனைத்துப் பயிற்சிபெற்ற மாணவர்களையும் விண்ணப்பிக்கச் செய்து, விண்ணப்பித்த காலம் முதல் பரீட்சை நடைபெறும் காலம்வரையும் வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் வேகப் பயிற்சிகள், மாதிரிப் பரீட்சைகள் நடாத்தப்பட்டன. இறுதியில் பரீட்சை தினங்களிலும் எமக்குத் தேவையான தட்டச்சு இயந்திரங்களையும் மன உறுதிகளையும் வழங்கி எமக்கு அளவிலா உதவி செய்தது இக்கழகமே!

நாட்டுப் பிரச்சினையின் மத்தியிலும் தளராது செயலாற்றி சேவை வழங்கிய எமது கழகத்தினால்த்தான் இன்று நாடெங்கிலும் உள்ள பல அரச அலுவலகங்களில் கழகத்தின் பழைய மாணவர்கள் என்ற அந்தஸ்துடன் என்னைப் போன்ற பலர் கடமையாற்றி வருகின்றோம். இதனால் கழகத்தின் பணி தொடர அனைவர் சார்பிலும் வாழ்த்துகின்றேன்.

*திருமதி. தர்ஷினி கிருஷ்ணகுமார்.*
பிரதேச செயலகம்,
சங்கானை.






# கணினியின் ஓர் அறிமுகம்

நவீன விஞ்ஞான உலகில் முக்கியத்துவம் பெற்று விளங்குவதும் உற்பத்தி வர்த்தக சந்தைப்படுத்தல் தொழிற்பாட்டிற் சிறப்பிடம் பெற்று விளங்குவதுமாக கணினியின் வளர்ச்சியையும் அதன் பிரயோகத்தையும் நாம் அறிந்திருக்க வேண்டியதன் அவசியம் யாவரும் உணர்ந்ததே. விஞ்ஞான முகாமைத்துவத்தின் வளர்ச்சிக்கு உதவிய Chareles Babbage என்பவரை தனது தந்தையாகக் கொண்ட கணினியின் வரைவிலக்கணம் யாதெனில் நாம் கொடுக்கும் தகவல், அறிவுரைகளை சேமித்து வைத்து எமக்கு தேவையான நேரத்தில் தேவையான விதத்தில் பெற்றுத்தரும் மின்சாரத் துடிப்புக்களுடன் கூடிய ஒரு இலத்திரனியல் கருவியாகும்.

தற்காலத்தில் பின்வரும் நுறைகளில் கணினி தன்னாட்சி செலுத்துகின்றது. வேலை வாய்ப்பு, வர்த்தகம், மருத்துவம், கல்வி, போக்குவரத்துத்துறை, உற்பத்தித்துறை, வீட்டுத்தேவை, நுண்கலைகள் மனித ஆற்றலுக்கு நிகரான இத்தகைய கருவிகளால் நாம் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கணினியின் வேகமான செயற்பாட்டின்மூலம் ஒரு மனிதன் 10 மணித்தியாலங்களில் செய்து முடிக்கக்கூடிய வேலையை ஒரு நிமிடத்தில் செய்யலாம்.
02. செயற்றிட்டம் முழுவதையும் பெற்று அதிலுள்ள ஒவ்வொரு கட்டளையையும் தானாகவே செயற்படுத்தி முடிக்கக்கூடிய ஆற்றல்.
03. பல்வேறு தேவைகளுக்கும் மாற்றிப் பாவிக்கக்கூடிய நெகிழ்வுத் தன்மையை கொண்டிருத்தல்.
04. தானாகவே உள்ளகப் பரிசோதனையை மேற்கொண்டு நம்பத்தகுந்ததும் சரியானதுமான தகவல்களை வெளியாக்கும் ஆற்றல் உடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


06. கணினியானது பல மணி நேரங்களுக்கோ அல்லது பல நாள்களுக்கோ தொடர்ந்து தொழிற்படக்கூடிய களைப்பற்ற தன்மை கொண்டது.
07. கணினிகள் அதிவேகமான நினைவக ஆற்றலைக் கொண்டது. கணினி கற்பதால் வேலைவாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றன.

இதனால் ஒரு சில தீமைகளும் ஏற்படுவதுண்டு. கணினி செயற்பாட்டின் வெற்றி கணினி தொழில்நுட்பத்தின் திறனைப் பூரணமாக பயன்படுத்துவதில் தங்கியுள்ளது. மேலும் அதன் சரியான செயற்பாடு அதனை இயக்க வழி நடத்த எழுதப்பட்ட செயற்றிட்டங்களின் பிழையற்ற தன்மையிலேயே தங்கியுள்ளது. செயற்றிட்டம் தவறாக எழுதப்பட்டால் விளைவும் தவறாகவே காணப்படும். அத்துடன் நிறுவனங்களில் இக்கணினிகளின் துரித செயற்பாட்டின் காரணமாக ஊழியர்களின் பயன்பாடு புறக்கணிக்கப்படுகிறது.

கணினியில் பல வகைகள் உண்டு. அவையாவன:-

*(i) Main Frame*
*(ii) Mini Computer System*
*(iii) Micro*

*1. Main Frame :-* இவ்வகையான இயந்திரங்களை ஒரு இடத்தில் பல நபர்களால் பயன்படுத்தமுடியும்.
*2. Mini Computer System :-* இவ்வகையான இயந்திரங்களை பல இடங்களில் பல நபர்களால் ஒரே நேரத்தில் பயன்படுத்த முடியும்.
*3. Micro :-* இவ்வகையான இயந்திரங்கள் ஒரு நேரத்தில் ஒருவரால் மாத்திரம் பயன்படுத்த முடியும். இதனை இவ்வகையாகப் பிரிக்கலாம்.






## CPU (Central Processing Unit):-

இப்பகுதி *Memory* என்ற சேமிப்பு அறைகளைக் கொண்டுள்ளது. இது நாம் கொடுக்கும் தகவல் அறிவுரைகளை *(Data)* விளக்கி அதன்படி தொழிற்படும்.

## Memory

இது பல இலட்சக்கணக்கான சேமிப்பு அறைகளைக் கொண்டது. நாம் கொடுக்கும் தகவல் அறிவுரைகளை *(Data)* பதிய இது பயன்படுத்தப்படும். இது தற்காலிகமானது.

## Input Divice

தகவல் அறிவுரைகளை *Computer* க்கு கொடுக்கும் சாதனங்களே *input divice* ஆகும்.
*Eg:- Keyboard, Disk, Scanner.*

## Output Divice:-

தகவல் முடிவுகளை காட்டும் சாதனங்களே *output divice* ஆகும்.
*Eg:- Monitor, Disk, Speaker, Printer.*

கணினி உலகில் முதன்முதலில் *Program* எழுதிய பெருமை *Lady Ada Love Lace* இனைச் சேரும். முதல் *Programer* என்ற வகையில் இவரைக் கௌரவிக்குமுகமாக *"ADA"* என்று உருவாக்கப்பட்ட ஒரு 'கணினி' மொழிக்குப் பெயரிடப்பட்டுள்ளது. *Lady Ada, Charles Babbage* இன் உதவியாளராகப் பணியாற்றியவர்.

செல்வி கமலா சுப்பிரமணியம்
*கழக போதனாசிரியை*

கண்பார்வை இல்லாதவர்களுக்கென்று ஒல்லாந்து நாட்டில் ஒரு தட்டச்சுப் பொறியை உருவாக்கி இருக்கிறார்கள். கண்பார்வை இல்லாதவர்களுக்கான 'பிரெய்லி' எழுத்துக்களே இத்தட்டச்சு பொறியில் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன. இதில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்துக்களைத் தொட்டுப் பார்த்து கண்பார்வை இல்லாதவர்கள் படிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுருக்கெழுத்தில் குறிப்பெடுத்தல்

சுருக்கெழுத்தில் குறிப்பெடுத்தல் பற்றி உங்களுடன் சிறிது கலந்துரையாட விரும்புகிறேன்.

தற்போது நிமிடத்திற்கு உங்களால் எத்தனை சொற்கள் எழுதமுடியும்? நிமிடத்திற்கு எத்தனை சொற்கள் வீதம் எழுதவேண்டும் என்ற ஆசை உங்களுக்கு இருக்கிறது. எவ்வளவு விரைவாக எழுதமுடியுமோ அவ்வளவு விரைவாக எழுதவேண்டும் என்ற விருப்பத்தையே பலர் கொண்டிருக்கிறீர்கள் என நான் எண்ணுகிறேன். நிமிடத்திற்கு 50 சொற்கள்வீதம் எழுதக் கூடியவர்களும் நிமிடத்திற்கு 100 சொற்கள்வீதம் எழுதக் கூடியவர்களும் இதையே எண்ணுவார்கள். ஆனால் இவர்கள் ஒவ்வொருவரும் தமது வேகத்தை 10, 20, 30 சொற்களால் கூட்டவேண்டும் என்ற சிரத்தை உடையவர்களாகவே இருக்கிறார்கள் என நான் எண்ணுகிறேன். மிகச் சிலரே ஆகக்கூடிய வேகத்தில் எழுதக்கூடயவர்களாக இருப்பார்கள். சிறிது பயிற்சியும் ஆர்வமும் இருக்குமானால் அனேகமான வர்களால் எழுதமுடியும்.

ஒரு கேள்வி அடிக்கடி எழுப்பப்படுகிறது. அலுவலகங் களில் வேலை செய்யும் சுருக்கெழுத்தாளர்களுக்கு எவ்வளவு வேகத்தில் எழுதக்கூடிய தகைமை இருக்க வேண்டும்? இதற்கான விடை தமிழில் நிமிடத்திற்கு 60 சொற்களும், ஆங்கிலத்தில் நிமிடத்திற்கு 80 சொற்களுமேயாகும். இது சாதாரண அலுவலக வேலைகளைச் செய்வதற்குப் போதுமானதாகும். ஆனால் அனுபவ ரீதியில் சொன்னால் பல அலுவலகங்களில் இது சரியான நிலையல்ல. தற்போது தமிழில் 40 முதல் 60 சொற்கள் வரையும் ஆங்கிலத்தில் 60 முதல் 80 சொற்கள் வரையும் எழுதுகிறவர்கள் முறையே 80 சொற்கள், 100 சொற்கள் வரையாவது எழுதத்தக்கதாக தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட மனதைத் திடப்படுத்திக் கொள்ளவேண்டும். உங்களது நிலையைப் பயிற்சி முடிவடையும் போது அல்லது முடிவடைந்த போது



நீங்கள் தமிழில் 60 சொற்களும் ஆங்கிலத்தில் 80 சொற்களும் எழுதுவீர்கள். அல்லது எழுதியிருப்பீர்கள். அதன் பின்பும் நீங்கள் உங்கள் ஓய்வு நேரத்தில் ஒரு பகுதியை சுருக்கெழுத்து அறிவை வளர்ப்பதற்கான பயிற்சியிலும் வேகத்தைக் கூட்டுவதற்கான பயிற்சியிலும் கட்டாயமாக ஈடுபடவேண்டும். பல சுருக்கெழுத் தாளர்கள் பணிபுரியும் அலுவலகங்களில் இவ்வாறான நடவடிக்கைகளை செயற்படுத்துவது இலகு. குறிப்பாகப் பகல் போசன இடைவேளையின்போது ஒரு 15 நிமிடமேனும் அவர்கள் ஒன்று சேர்ந்து இதற்காகச் செலவிடலாம்.

உங்கள் வேலையில் நீங்கள் சந்தோசமடைபவராக இருக்க வேண்டும். நீங்கள் காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் அலுவலகத்திற்குச் செல்வதற்காக உங்கள் கடமைகளைச் சுறுசுறுப்பாகச் செய்வீர்கள். அலுவலகம் சென்றதும் உங்களால் முடிந்ததைவிடச் சற்று கூடுதலான வேலை செய்யும்படி உங்களைக் கேட்டால் நீங்கள் நிச்சயமாகச் சந்தோசமடைவீர்கள். உங்கள் வேலையில் உண்மையான கவனம் எடுப்பீர்களேயானால் நீங்கள் அதைச் சரியாகச் செய்து முடிப்பீர்கள். அவ்வேலையை உயரதிகாரியிடம் ஒப்படைக்கும் போது அவரது பாராட்டு உங்களைப் பூரிப்படையச் செய்வதோடு உங்கள் வேலையில் மேலும் ஆர்வம் தோன்றும்.

இதேபோல் உங்கள் பயிற்சியின் ஆரம்ப காலத்தில் நீங்கள் அதிகம் வேலை செய்திருந்தால், நீங்கள் சுருக்கெழுத்தை எழுதுவதில் வல்லவராவீர்கள்.

சுருக்கெழுத்துப் பற்றி சில குறிப்புகளை இங்கு சொல்கிறேன்.

01. சுருக்கெழுத்தை எழுதுவதற்குத் தரமான தாள்களை பாவியுங்கள். நீங்கள் பாவிக்கும் தாள் தரம் குறைவாக இருப்பின் நீங்கள் கூடிய வேகத்தில் எழுத முயற்சி செய்யவில்லையென்றே சொல்லவேண்டும். உங்கள் பயிற்சி நிலையத்திலும் எழுதும் உபகரணங்கள் எப்போதும் மிகவும் சிறந்த தரத்திலுள்ளதாக இருத்தல் வேண்டும். அத்துடன் எழுதும் போது ஒரு தாளை மிக வேகமாகத் திருப்புவதற்கும் பழகிக் கொள்ளவேண்டும். அல்லது பந்தியை வாசிப்பவர் நீங்கள் எழுதுவதைவிட பல சொற்கள் முன்னதாகவே சென்று கொண்டிருப்பார். தாள்களைப் புரட்டுவதற்கு அதிக நேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுப்பதாலேயே சுருக்கெழுத்துப் பரீட்சையில் பலர் சித்தியடையத் தவறுகின்றனர் என்றும் அறியக்கூடியதாக உள்ளது. இதற்காக ஓர் உதாரணத்தை இங்கே பார்ப்போம். நீங்கள் நிமிடத்திற்கு 60 சொற்கள் வீதம் எழுதுகிறீர்கள் எனக் கொண்டால் ஒரு விநாடிக்கு ஒரு சொல் வீதம் எழுதுகிறீர்கள். நிமிடத்திற்கு 120 சொற்கள் வீதம் எழுதுகிறீர்கள் எனக் கொண்டால் வினாடிக்கு 2 சொற்கள் வீதம் எழுதுகிறீர்கள். இதிலிருந்து தாள்களைத் திருப்புவதற்கு பெறுமதி மிக்க நேரத்தில் 5 விநாடிகளுக்கு மேல் செலவளிக்கக் கூடாது.

